**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**முன்னிலை: திருமதி.என்.மீனாட்சி, B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 09–ம் நாள் வியாழக்கிழமை**

**EA.No.02/2025**
**in**
**EP.No.12/2022**

1. S.M.மணிவண்ணன், ..... மனுதாரர் / EP எதிர்மனுதாரர்

/எதிர்/

பொது மேலாளர்,
BBTC நிர்வாகம், முடீஸ் ..... எதிர்மனுதாரர் / EP மனுதாரர்

இம்மனுவானது கடந்த 30.03.2026 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாருக்காக மனுதாரரே முன்னிலையாகியும், எதிர்மனுதாருக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.பால்பாண்டி, அவர்கள் முன்னிலையாகி எதிருரை தாக்கல் செய்யாமல் ஒருதரப்பாக்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இந்நாள் வரை பரிசீலனையிலிருந்து, இம்மனுவில் இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும்...

## உத்தரவு

1. மனுதாரர் நிறைவேறுதல் மனு எண்.12/2022 நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க தடை உத்தரவு கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி26–ன் படி மனு தாக்கல் செய்துள்ளார் .

**2. மனுவின் சுருக்கம்:–**

இந்நிறைவேற்று மனுவினை தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.171/2012–ன் 23.12.2021–தேதியிட்ட தீர்ப்பாணை நகலில் பாம்பே பர்மா டிரேடிங்க் கார்ப்பரேஷன் லிட், முடீஸ் அதன் குரூப் மேலாளர் வாதி என உள்ளது. வாதிக்கு பெயர் இல்லாத நிலையில் நிறைவேறுதல் மனுதாரர் யாரோ ஒரு நபர் கையெழுத்து செய்துள்ளார். தீர்ப்பாணைக்கும், இந்த நபருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. நிறைவேற்று மனுவின் 11–வது பாராவில், பெயர் இல்லாத ஒருவரது கையொப்பம் உள்ளது. பொள்ளாச்சி நீதிமன்றத்தில் அசல்

MEENATCHI MURUGAN
Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.10 18:29:24 +0530

வழக்கு எண். 519/2000-ம் விசாரணைக்கு எடுத்து, பின்னிட்டு வால்பாறை நீதிமன்றத்திற்குள் மாறி வந்து அசல் வழக்கு எண்.29/2004-ல் 7வது பத்தியில் வாதிக்காக யாரோ ஒரு நபர் நீதிமன்ற அனுமதியின்றி I.A, நம்பர் தேதி , விபரம் எதுவும் இல்லாமல் 7(a) The Plaintif by way at abunteat cuatior and to orrid tecknicatities to majer for decloratid title Hence the .......................................... என எழுதியிருப்பது புரியவில்லை.

2.2 அசல் வழக்கில் பாரா 10-ல் (Submit for decloring the plaintiff tittle to the suit property and consequently) இந்த திருத்தம் செய்ததற்கு இடைமனு எண் அனுமதித்த விபரம் இல்லை. அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 4 ஆண்டுகளுக்கு பின்னிட்டு சட்டவிரோதமாக அசல் வழக்கில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. 01.12.2004-ம் தேதியில் அசல் வழக்கை வேறு ஒரு நபர் கையொப்பம் செய்து தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் விளம்புகை பரிகாரம் கோராத நிலையில், தீர்ப்பாணையில் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளதாக சொல்லியிருப்பது தவறு. இந்நீதிமன்றம் அசல் வழக்கு கோப்புகளை பொள்ளாச்சி முதன்மை நீதிமன்றத்திலிருந்து வரவழைத்து பரிசீலிக்க வேண்டும்.

2.3 தீர்ப்பாணையில், " முடிவாக வாதியின் வழக்கு செலவுத் தொகையின்றி பகுதியாக அனுமதிக்கப்பட்டு தாவா சொத்தைப் பொறுத்து வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வழங்கியும் தாவா சொத்தின் சுவாதீனமும் வாதிக்கு கிடைக்க தக்கது என்னும் இதரபரிகாரங்களை பொறுத்து தள்ளுபடி செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது." இதில் சுவாதீனம் எப்போது வாதிக்கு கிடைக்க வேண்டும் என்ற கால வரையறையை சொல்லாத நிலையில், காலவரையறைக்கு வாதி மேல்முறையீடு செய்யாமல் நிறைவேற்று மனு தாக்கல் செய்திருப்பது எப்படியாவது ஏழையின் சொத்தை அபகரிக்கும் செயல். நிறைவேறுதல் மனு விசாரணைக்கு உகந்தது அல்ல என திருப்பப்பட்டிருக்க வேண்டும்.

2.4 நிறைவேறுதல் மனுவை பெயர், ஊர், விலாசம் இல்லாத யாரோ ஒரு நபரால் நிர்வாகத்தின் சார்பாக கையெழுத்து செய்துள்ளார். அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து 3 விலாசம் இல்லாத நபர்கள் கையெழுத்து செய்திருப்பது உரிமையியல் நடைமுறை சட்டத்திற்கும், கட்டளை 30 விதி 1 மற்றும் 2-ன் படியும் தவறானது ஆகும். அசல் வழக்கில் பெயர், விலாசம் இல்லாத நபர்கள் தாக்கல் செய்து கையொப்பம் செய்துள்ளதும், தீர்ப்பாணையில் யார் பெயரும்

MEENATCHI MURUGAN
Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.10 18:29:32 +0530

குறிப்பிடாத நிலையிலும், மேற்படி நபர்கள் யார் என்று தெரியாத நிலையிலும், நிறைவேறுதல் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் மனுவின் உண்மை தன்மைகள் நிரூபிக்கப்படும் வரை தடை உத்தரவு வழங்க கோரி மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாமல் ஒருதரப்பாக்கப்பட்டுள்ளார்.

**3. தீர்வுக்குரிய பிரச்சனை:–**

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

4. மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. மனுதாரர் அசல் வழக்கு எண்.171/2012– ன் உத்தரவில் சுவாதீனம் ஒப்படைக்க காலவரையறை இல்லை என்றும், அசல் வழக்கிலும், நிறைவேறுதல் மனுவிலும் பெயர், ஊர், விலாசம் இல்லாதவர் பெயரில் அசல் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, அசல் வழக்கில் தீர்ப்பாணையில் திருத்தம் செய்து இந்த நிறைவேறுதல் மனுவின் மனுதரார் தாக்கல் செய்யும் வரை தடை உத்தரவு வழங்க வேண்டும் என இம்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

6. மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் CRP (NPD) No. 783/2010 K.Lakshmiammal Vs D.S Nagalakshmi வழக்கில்

7. In this case, admittedly, the petitioner has not sought for any stay so far, before the trial Court or has not filed any appeal before the appellate court as against the judgement and decree passed against her on 26.03.2007 and has not sought for stay of the execution proceedings. While that being the position, the petitioner cannot approach the executing court by filing an application under Order 21 Rule 26 CPC seeking for stay of the execution proceedings without satisfying the requirements as contemplated under Order 21 Rule 26(1) CPC which reads as follows:-

" 26. When Court may stay execution :- (1) The Court to which a decree has been sent for execution shall, upon sufficient cause being shown, stay the execution of such decree for a

MEENATCHI MURUGAN
Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.10 18:29:39 +0530

reasonable time, to enable the judgement-debtor to apply to the Court by which the decree was passed, or to any Court having appellate jurisdiction in respect of the decree or the execution thereof, for an order to stay execution, or for any other order relating to the decree or execution which might have been made by such Court of first instance or Appellate Court if execution had been issued thereby, or if application for execution had been made thereto.

8. From the perusal of the above provision under Order 21 Rule 26 of CPC, it could be seen that the executing Court shall stay the execution of the decree for a reasonable time upon showing sufficient cause, to enable the judgement debtor to apply for stay either before the trial Court or before the Appellate Court. Thus, the power vested on the executing court under Order 21 Rule 26 CPC is to be exercised only for a reasonable time and that too for the purpose of enabling the judgment debtor to apply before the trial Court or the appellate Court seeking for stay of the execution proceedings. It is nothing but granting a breathing time to the judgement debtor to approach the appropriate forum and seek stay of the execution. If no such application is filed by the judgement debtor within a reasonable time, either before the the trial court or the appellate Court, even after filing the application under Order 21 Rule 26 before the executing Court, the said Court cannot prolong such stay indefinitely as the said relief contemplated under Order 21 Rule 26 is only for a reasonable time and not for a prolonged time. Thus, if no step is taken to approach the trial Court or the appellate Court seeking for stay of the execution, the executing Court has to reject/dimiss the application on the ground that the judgement debtor has not complied with the requirement contemplated under the said provision. Applying the said principle to the facts of the present case, it is seen that though the petitioner had approached the executing court by filing the present application under Order 21 Rule 26 of CPC and obtained interim stay during the vacation time, it appears that the petitioner has not approached either the trial Court or the appellate court seeking for stay of the execution proceedings. Consequently, she failed to satisfy the mandatory requirements under Order 21 Rule 26 CPC. Therefore, the petitioner is not entitled to seek protection under Order 21 Rule 26 and the Court below has rightly rejected the said application.

9. The decision relied on by the learned counsel for the respondent in Kum.R.Komala Vs. Mohammed Iqbal (AIR 1999 Karnataka 337) also deals with the issue and it was observed therein that Order 21 Rule 26(1) only relates to granting of limited stay of execution by the

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.10 18:29:45 +0530

execution Court and for only a specific purpose so as to enable the judgment debtor to apply for stay order from the appellate court or from the trial court which passed the decree. As it is not the case of the petitioner that any such application is filed or pending before the trial court or the appellate court, I find no reason to interfere with the order passed by the court below. The Civil Revision Petition is dismissed. It is open to the petitioner to work out her remedy either before the trial court or by filing an appeal before the appellate court. No costs.

என வழங்கியுள்ள முன்தீர்ப்பிலிருந்து உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 21 விதி 26-ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களுக்காகயன்றி வேறு காரணங்களுக்காக நிறைவேற்றுகை நீதிமன்றம் நிறைவேற்றுகை மனுவின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க உத்தரவிடமுடியாது என முடிவு கண்டுள்ளதை அறியமுடிகிறது.

7. இம்மனுவை பார்வையிடும் போது, மேல்முறையீட்டு நீதிமன்றத்திலோ அல்லது வழக்கு விசாரணை நீதிமன்றத்திலோ தடை உத்தரவு இருப்பதாக முன்னிடவில்லை. அசல் வழக்கின் தாவா சொத்தைப் பொறுத்து நிறைவேற்றுகை மனுவின் மனுதாரர் / எதிர்மனுதாரருக்கு ஆதரவாக விளம்புகை பரிகாரம் வழங்கியும், தாவா சொத்தின் சுவாதீனம் எதிர்மனுதாரர் / மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை மனுதாரர் ஒப்புக்கொள்கிறார். தீர்ப்பாணையில் அசல் வழக்கில் வாதி பெயர் குறிப்பிடவில்லை. நீதிமன்ற அனுமதியின்றி திருத்தங்கள் ஏற்பட்டுள்ளது. மனுதாரர் / எதிர்மனுதாரர் சுவாதீனம் ஒப்படைக்க கால அவகாசம் தீர்ப்பாணையில் குறிப்பிடவில்லை என்ற காரணங்களுக்காக நிறைவேறுதல் மனு நடவடிக்கைகளை தடை செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

8. அசல் வழக்கில் 23.12.2021-ம் தேதி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ஏற்பட்டும், நிறைவேற்றுகை மனு 17.06.2022-ம் தேதி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டும் உள்ள நிலையில் சட்டப்படியான உரிய காலத்திற்குள் மேல்முறையீட்டு நீதிமன்றத்திலோ, வழக்கு விசாரணை நீதிமன்றத்திலோ தடை உத்தரவு பெறாமலும், இம்மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் அசல் வழக்கு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில் குறைவுற்றிருந்தால்

MEENATCHI MURUGAN

Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.10 18:29:51 +0530

அதன் மீது மனுதாரர் மேல்முறையீடு செய்திருக்க வேண்டும். ஆனால் நிறைவேற்றுகை மனு நடவடிக்கைகளை நிறைவேற்று மனு மனுதாரர் தீர்ப்பாணையை திருத்தம் செய்து தாக்கல் செய்யும் காலம் வரை தடை உத்தரவு வழங்க வேண்டும் என இம்மனுதாரர் கோரியுள்ளார். மனுதாரர் நிறைவேற்றுகை மனு நடவடிக்கைகளை வீண் காலதாமதப்படுத்த வேண்டும் என்பதற்காக மட்டுமே தீய நோக்கத்தோடு ஏற்றுக்கொள்ள தக்க காரணங்களன்றி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே, அசல் வழக்கில் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீட்டு நீதிமன்றத்திலோ, வழக்கு விசாரணை நீதிமன்றத்திலோ தடை உத்தரவோ நிலுவையில் இல்லாத நிலையிலும், ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்களின்றி நிறைவேற்றுகை மனு நடவடிக்கைகளை காலதாமதப்படுத்த வேண்டும் என்பதற்காக இம்மனுவை தாக்கல் செய்து வீண் காலதாமதம் ஏற்படுத்தி வருகிறார் என்ற நிலையிலும், இம்மனுவின் சூழ்நிலைகளில் இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

10. முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்து, பிழை நீக்கம் செய்து இன்று 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09–ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MEENATCHI MURUGAN

Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.10 18:29:57 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் வால்பாறை.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:</u> –**

இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்: –</u>**

இல்லை.

MEENATCHI MURUGAN

Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.10 18:30:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் வால்பாறை.